634

மும்மணி

MUMMANI 卐 मुम्मणि

15 ஜுலை 1947

634

மும்மணி காரியாலயம்.

4, பந்தர் தெரு சென்னை. 1

விலை 3 அணா

மும்மணி காப்பாளர்கள்

ஸ்ரீ டில்லி கொல்லாபுரம் ஜினகஞ்சி பெனு கொண்டை எனும் நான்கு மடங்களுள் ஒன்றாய ஜிநகஞ்சி மடத்துத்தலைவர் ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மிசேன பட்டாரக பட்டாசார்ய வர்ய ஸ்வாமியார் அவர்கள் மும்மணித்தலைவராக இருக்க, ஒவ்வொரு இதழும் நன் முறையில் தகுந்த காலத்தில் வெளி வரும்படி உதவி செய்பவர்களாகிய மஹா ஸம்ரக்ஷகர்கள்.

ஸம்ரக்ஷகர்கள் :—

K. P. பொன்ரங்க நைனார் தச்சூர்
V. G. சம்பத்ராவ் நைனார் மேல் சித்தாமூர்.

போஷகர்கள் :

மணியம், அனந்தராஜு நைனார் தச்சூர்.
கைலாச நைனார் வளத்தி.
தீபநாயகம் ஜைன், தஞ்சாவூர்.
துரைசாமி நைனார், சிந்திப்பட்டு.
C. அண்ணாசாமிநைனார் தச்சாம்பாடி
A. சந்த்ரநாதநைனார் ரிவின்யூ இன்ஸ்பெக்டர் அண்ணமங்கலம்
T. A. ஜன குமாரநைனார் திருப்பணமூர்
சுகாவதி அம்மாள் திருப்பனமூர்
A. ஜெயபாலநைனார் நெல்லியாங்குளம்
தேவராஜநைனார் தென் சேந்தமங்கலம்

இவ்விதழில்

பக்கம்

1. இறைவன் வணக்கம்
2. வாழ்த்து — S. P. G. NAINAR
3. பதிப்புரை — பதிப்பாளர்
4. வினாவிடைகள் — ஸ்ரீபால வர்ணீஜீ
6. தீண்டாமை ஒழிந்தது — S. P. கெம்பீர நைனார்
8. தெய்வ மென்பேன் — S. S. அருணகிரிநாதர்
9. ஆவி உலகச் செய்திகள்
10. நீதி நூல்களும் தற்கால வாழ்க்கையும் — S. A. ஜைன் M. A,
13. ஜைனமும் தமிழ் நாடும் — வித்வான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
15. சித்தன்ன வாசல் — எஸ். ஆர். வெங்கட்ராமன் பி.ஏ.பி.எல்
17. ஓர் இரவு — வித்வான் வே. லக்ஷ்மணன்
12. பெண் கல்வி — யசஸ்வதி

ஸ்ரீ

வந்தே ஜினவரம்.

卐 மும்மணி 卐

மலர் 1] 1947 ஜுலை 15 [இதழ் 1

இறைவன் வணக்கம்

குற்றங்க ளில்லான் குணத்தா
    னிறைந்தான் குணத்தான்
மற்றிந்த வைய மளந்தான்
    வைய நின்ற பெற்றி
முற்று முரைத்தா னுரைநீ
    ரொன்ப தாய தொன்றாற்
செற்றங்க டீர்ப்பான்
    விமலன்சரண் சென்னி வைத்தேன்.

OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1947
MADRAS

*   *   *   *

குற்ற மொன்றின்றிக் குறையின்றுணர்ந்தறம்
பற்ற உரைத்தா னிறை.

*   *   *   *

திங்கண் மும்மாரி பெய்க,
    திருவறம் வளர்க, செங்கோல்
நன்கினி தரசன் ஆள்க,
    நாடெலாம் விளைக, மற்றும்
எங்குள வறத்தினேரும்
    இனிதூழிவாழ்க, எங்கள்
புங்கவன் பயர்ந்த நன்னூல்
    புகழொடு பொலிக மிக்கே.

வாழ்த்து

மும்மைசா லுலகுக் கெல்லாம் முழுநிழல் பரப்புகின்ற
மும்மதி யடுக்கைப்போலும் முக்குடைச் செல்வன் முன்னுள்
செம்மை யென்றுணர்ந்துரைத்த செழித்த மும்மணியை
(மான
நம்மெதிர் நடக்கும் நற்றாள் மும்மணி நலம்பெற்றோங்க.

காலத்துக் கேற்ற கட்டுக் கதையினில் காவியத்தில்
ஞாலத்தார் நயந்து நாடும் நல்லவாராய்ச்சி தன்னில்
சீலத்தார் சிறக்ககூறும் சிறப்புடை யொழுக்கம்என்னும்
கோலத்தை யமைத்துக் கோட்டமின்றி யெந்நாளும் வாழ

புண்ணியன் புலவன் புத்தன் பொலிந்த முக்குடையின்
(நாதன்
பண்ணவன் கமலவூர்திப் பரமன் ஐம்புலனவித்தோன்
எண்குணத் திறைவனாகும் எம்மிறை யருகன் நற்றாள்
நண்ணி நம்முடியிற்சூட்டி நாளும் நாம் வாழ்த்துவோமே.

S. P. G, Nainar

எங்கள் கம்பெனியில் மஹாவீர் ஆபீஸ்காலண்டர் பாக்கெட் காலண்டர், ஹைஸ்கூல், எலிமெண்டரிஸ்கூல் பாடபுஸ்தகங்களும், ஜைந சமய நூல்களும் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன. விவரமறியவிருப்புவோர் கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்,

மஹாவீர் கம்பெனி,

பந்தர்தெரு, மதராஸ் 1.

பதிப்புரை

உலகிற் சிறந்த பொருளை வட மொழியினர் ரத்னம் என்றும், தமிழர் மணி யென்றும் வழங்குகின்றனர். நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் (பக்தி ஞானம் வைராக்யம்) ஆகிய இம் மூன்றும் மானிட வர்க்கத்திற்குச் சிறந்தவை யாகலின், இவற்றை "மும்மணி" யென்று வழங்கலாயினர்.

மண்ணிலும் நீரிலும் புதைந்து கிடைத்தற் கரிதாகிய மணியை ஒருவன் பெற்றெடுத்து அதனைச் சாணைக்கல் முதலிய கருவிகளால் அழகுபடுத்தி ஆபரணமாகச் செய்த பின்னர், அம்மணி அவனது கழுத்திலும் சிரஸிலும் சேர்ந்து அவனை அழகுபடுத்துதல் போல, "மும்மணி" தன்னைப் பெற்ற ஒருவனை உலக வாழ்க்கையிற் சிறந்தவனாகவும் சுவர்க்கம் மோக்ஷம் என்னும் ஒப்பிலா உயர்ந்த சுகத்தை யனுபவிப்பவனாகவும் செய்யும். அத்தகைய கட்டுரைகளும், ஆராய்ச்சிகளும் இவற்றுள் வெளிவரும். ஆதலின், இந்த வெளியீடு "மும்மணி" என்னும் பெயர் பெற்றது.

இயல், இசை, நாடகம் என்னும் இம் மூன்றும் தமிழ் மொழியிற் சிறந்து விளங்குவனவாகலின், அம் முத்துறைகளிலும் இவ்வெளியீடு தன்னாலாய பணி புரிய முன் வந்துளது. அதனாலும் "மும்மணி" என்னும் பெயர் பெற்றதாகும்.

"மார்பிற்கு அணிகலன் மணி" யாகும். அதுபோல இந்த வெளியீட்டில் வெளிவரும் கட்டுரைகளும், ஆராய்ச்சிகளும், தொழில் முறை முதலானவைகளும் காலத்திற் கேற்ற பொருள்கள் அமைந்தனவாய்க் கற்றோரும் மற்றோரும் மகிழ்ந்து மனத்திற்கு அணிகலனாகக் கொள்ளத்தக்கனவா யிருக்கும். ஆதலின், அன்பர் பலரும் இதனை விழைவுடன் படித்து இன்புற வேண்டுகின்றோம்.

எஸ். வர்ணீ

பதிப்பாளர்.

வினா விடைகள்

(ஸ்ரீபால வர்ணீஜீ)

---

1. ஜிநன் என்பவர் யார்?

வினையின் நீங்கி, விளங்கிய அறிவு பெற்று, உலக மக்களுக்கு நன்மையைப் போதித்தவர்.

"ஜெயித்தவன் ஜிநன்"

2. ஜைநர் என்பவர் யார்?

ஜிநன் உபதேசித்த (வழியில் நடப்பவர்.) தருமநெறியில் நிற்பவர். "ஜிநனைவழிபடுவோர் ஜைநர்."

3. சமணர் என்பவர் யார்?

ஶ்ரமணன் (துறவி) அருகன், கேவலி என்னும் சொற்கள் ஜிநனையே குறிப்பன. ஶ்ரமணன் என்பது வடசொல் அதனைத் தமிழர் சமணன் என்பர். சமணன்கொள்கையைக் கைப்பற்றியவர் சமணர்.

"சம நோக்குடையர் சமணர்"

4. தீர்த்தங்கரர் என்பவர் யார்?

நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நாற்கதி சுழற்சி உருவமாகிய ஸம்ஸாரதுக்கத்திற்குக் காரணமாகிய கருமங்களைக் கெடுத்து, உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் ஒருங்கே ஒரே சமயத்தில் அறியும் அறிவு பெற்று, உலகமக்களுக்கு தருமத்தைப் போதித்தவர்.

"தருமத்தை உரைத்தவர் தீர்த்தங்கரர்"

5. தருமம் என்பது எது?

பிறவிக்கடலில் மூழ்கி, துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் பிராணிகளை அத் துக்கத்தினின்றும் நீக்கி, என்றும் அழிவிலா முக்தி சுகத்தைத் தருவது தர்மம்.

"பேரின்பத்தைத் தருவது தருமம்."

6. அருகன் என்பவர் யார்?

அரி என்பது மயக்கத்தை உண்டு பண்ணும் மோஹநீய கர்மத்திற்குப் பெயர். அப் பெற்றிய கர்மத்தைக்

கெடுத்தவருக்கு அரிஹறன் என்று பெயர். தமிழர் அருகன் என்பர். அரி என்னும் சொல் பகை யென பொருள்படும்.

"அரியை வென்றவன் அருகன்"

7. புத்தன் என்பவர் யார்?

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் அறிந்து அவற்றை மக்களுக்குப் போதித்தவர் புத்தர்.

"போதியைப் பெற்று போதித்தவர் புத்தர்"

போதி என்பது அறிவு.

8. ஜைநர் எத்தனை வகையினர்?

திகம்பரர், ஸ்வேதாம்பரர் என இரு வகையினர்.

9. திகம்பரர் என்பவர் யார்?

ஜிநருக்குத் திகம்பரர் என்றும் ஒரு பெயர் உண்டு. திக்கை ஆடையாகக் கொண்டவர் திகம்பரர். அவருடைய கொள்கையைப் பின்பற்றி நடப்பவர் திகம்பரர். தற்காலத்தில் சிலர் கூறுகின்றனர்; திகம்பரர் என்றால் ஆடை இன்றி தானே இருத்தல் வேண்டும் என்று. அது சரி யன்று. திகம்பரர் என்பவர் ஒரு துறவி(ஸாது). அவர் ஆடையின்றி யிருப்பர். அவர்போதித்த தருமத்தைக் கைக் கொண்டு நடப்பவர் இல்லறத்தார். ஆடை அணிந்தே இருப்பர். துறவி மாத்திரம் ஆடையின்றியே இருப்பர். ஆடை அணிந்துள்ள இல்லறத்தாரும் திகம்பரரின்(துறவியின்) தருமத்தைத் தழுவினவர் ஆகலின், திகம்பரர் எனப்படுவர்.

10. ஸ்வேதாம்பரர் என்பவர் யார்?

வெள்ளை ஆடை அணிந்த முனிவர் உபதேசித்த நெறியில் நிற்பவர் ஸ்வேதாம்பரர். பகவானுக்கும் ஆடை அணிகளை அணிந்து வழிபடுபவர்.

சிந்தாமணியில் சிறுகதை

தீண்டாமை ஒழிந்தது

வித்வான் : S. P. கெம்பீர நயினர்.

வானுற வளர்ந்த ஒரு காடு. அக் காட்டில் ஒரு வருக்கைப் பலா மர வரிசை. (பலா மரங்களில் வருக்கைப் பலா, ஆசினிப் பலா என இருவகைகள் உண்டு. அவற்றுள் இவ் வரலாற்றில் காணப்படுகின்றவை வருக்கைப் பலா மரங்களாகும்.) வளம் பெற்ற அப் பலாமர வாசி ஓர் ஆண் குரங்கு. அது களங்கமற்ற உள்ள முடையது போல் நடந்து வருகிறது. வந்து தன் மனைவியாகிய பெண் குரங்கு ஒன்றினை நெருங்குகின்றது. தன்னை நெருங்கிய அவ்வாண்குரங்கைக் கண்ட மனைவிக் குரங்குச் சிறிது அப்பால் அகலுகின்றது. அகன்று போய் தன் புருஷனை உற்று நோக்குகின்றது.

பின்னர். அது, "பரத்தையர் அல்லது விலை மாதர்கள், பணம் பறிப்பதனையே பழக்கமாய்க் கொண்டவர். கற்பினைக் கனவிலும் கருதாதவர், தம் உயர் நலத்தினைப் பொருள் வேண்டி விற்பவர். தக்கார், தகவிலார் அனைவரையும் தழுவு வர். பெருமை யற்றவர். இழிமையுற்றவர். அத்தகைய இழிந்த பரத்தைக் குரங்கைக் கூடினீர் நீவிர், ஆகவே அவரினும் இழிந்தவர் ஆயினீர். அவ் விழிந்த உம்மைப் பத்தினிப் பெண்ணாகிய யான் தீண்டிக் கொள்ள மாட்டேன். என்னைத் திண்ட வருதலும் உமக்கு அழகாகாது. ஆகவே நீவிர் முதலில் விலகிச் செல்லுங்கள் தூரத்திலே, இரண்டாவதாகத் தூய நீருள்ள இடத்தைநெருங்குங்கள். குளித்து முழுகுங்கள் அத்தெளிந்த நீரிலே! மாசை மாற்றுங்கள் தூய்மையைப் பெறுங்கள். திரும்பி வாருங்கள். அதன் பின் என்னைத் தீண்ட முயலுங்கள். அதுதான் நம் பெருமைக்குத் தகுதியாகும். இன்னும் இங்கு நிற்க வேண்டாம்: அகலுங்கள் அப்புறத்தே! என்று கண்டிக்கும் முறையாக,

"பரத்தையர்த் தோய்ந்த மார்பம் பத்தினி மகளிர் தீண்டார்
திருத்தகைத்து அன்று தெண்ணீர் ஆடினீர் வம்மின்."

என்கின்றது.

அவ்வார்த்தைகளைக் கேட்ட ஆண் குரங்கு உண்மையில் நடுங்குகின்றது. பின்னர் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொள்ளுகிறது. பரத்தையர் என்ற சொல்லைத் தன் வாயால் சொல்லவும் கூசுவது போல் பாசாங்கு செய்கிறது. செய்து தன் மனைவியை நோக்குகின்றது.

நோக்கி இப்பொழுது நீ உரைத்த, ஆனால் நான் என் வாயால் சொல்லவும் கூசுகின்ற அவ் விழிந்த செயலைச் செய்யவுமில்லை. செய்ய வேண்டுமென்று தூய என் மனத்தால் நினைக்கவுமில்லையே! என்று பின்னும்.

உயர்வாக வளர்ந்துள்ளது ஒரு மலை. அம்மலை மிசை ஓங்கியுள்ளன மூங்கில் மரங்கள். அம்மரங்களில் கட்டப்பட்டுள்ளன தேன் கூடுகள். அக்கூடுகளில் விளைகின்றது உயர்ந்த இனிய தேன். அவ்வுயர் மலைத் தேனை உண்ணுகின்ற ஒருவன் அதனை விட்டு அயலிலே யுள்ள, துன்பம் விளைவிக்கின்ற, கசப்பு மிகுந்த எட்டிக்காயையும் வேப்பங் கனியையும் கைக்கொள்ளக் கருத மாட்டான்.

அது போன்றே உயர்குடிப் பிறந்து உயர்குடிப்புகுந்த உயர் பத்தினிப் பெண்ணை மனைவியாகக் கொண்ட ஒருவன் அவ்வினிய இளைய, அழகிய அருங்குணம் அமைந்த அம்மனைவியை விலக்கி விட்டுப் பக்கததேயுள்ள இழிந்த, காசுபறிக்கின்ற, பறித்தபின் கொடுத்தவர்க்கு துன்பத்தைக் கொடுக்கிற தீய பரத்தைப் பெண் ஒருத்தியைச் சேர விரும்ப மாட்டான். அப்படியே யானும் உயர்ந்த பத்தினியும் என் அருமை மனைவியும் ஆகிய உன்னை விலக்கி விட்டுக் கேவலம் பரத்தைக் குரங்கைக்கூடு வேனோ! நீயே யோசித்து இதற்கு விடை சொல்! பார்க்கலாம் என்று கேட்கும் பாவனையாக,"

"உரைத்தது என்மனத்தில்இல்லை உயர்வரைத்தேனை உண்பார்
வருத்து காஞ்சிரமும் வேம்பும் வாய்க் கோள்வார் யாவர் சொல்
[வாய்."

என்று கேட்டுக் கொண்டு தூரத்திலேயே நிற்கின்றது. அவ்வாறு அகன்று நின்ற தன் புருஷனுக்கு அப்பெண் குரங்கு பதில் வார்த்தை ஒன்றும் கூறவில்லை. ஆனால் உற்று நோக்குகின்றது. உறுத்துப் பார்க்கின்றது. வெறுத்து நிற்கின்றது. (தொடரும்)

நன்றி அறிவிப்பு

ஜைன சமய நூல்களுக்குத் தலைமையதாய ஸ்ரீபுராணத்தை மிக்க ஆர்வத்துடன் 7, 8 வருஷகாலமாகச் சீர் திருத்தி வெகு அழகாக அச்சிட்டு, நம் சமூஹத்திற்குப் பேருதவி புரிந்த, திருவாளர், வே. வேங்கடராஜலு ரெட்டியார் அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து, இன்னும் இப்பெற்றிய அரிய தொண்டுகளை ஜைன சமூகத்திற்குச் செய்ய, உடல் வலிமையும், ஊக்கமும் அளிக்குமாறு பரமாத்மனைப் போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுகின்றோம்.

ஜைந சமய ஊழியர்.

தெய்வ மென்பேன்

ஆக்கியோர். எஸ். எஸ். அருணகிரிநாதர்.

மதக்கொடுமை !

மதத்தின் கொடுமை மடித்தது பலரை
அரசரும் அதனுல் அறிவிழந் தனரே
மதுரைச் சமணர் மடிந்ததை அறிவீர்
அதற்கும் காரணம் அற்புதம்! அற்புதம்!!
இன்றும் அதற்கொரு விழாவும் ஏனே?
கொலைக்கு விழாவும் கொள்ளுதல் வேண்டுமோ?

இதையெலாம்,

எண்ணவும் நெஞ்சம் எரிந்தழிந் திடுமே!
மதமெனில் கொலையே மலிந்திடச் செய்வதோ?
இதமாய் எவர்க்கும் இன்செயல் புரிந்தே
பதமாய் நடப்பதே மதமெனப் படுமே!

நினைத்துப்பாரும் !

இத்தமிழ் நாட்டுக் கின்று
இருந்திடும் பெருமை யெல்லாம்
நித்தமும் சமணர் தாமே
நிலைபெறத் தமிழில் செய்த
புத்தகம் தன்னுல் என்பேன்
பொறுத்துநீர் நினைத்துப் பாரும்
உத்தியாய் அவரைக் கொன்றுர்
மதத்தினை உளத்திற் கொண்டே!

தெய்வமென்பேன் !

மதத்தினை மனத்திற் கொண்டு
மக்களை மடிப்ப தென்றுல்
பதமுறு செயலு மாகா
பண்புறு குணமு மாகா
சதமெனத் தமிழை நாளும்
சார்ந்துதான் வளர்த்து வந்த
இதமுறு சமண ரிங்கு
எம்மனோர் தெய்வ மென்பேன்.

ஆவி உலகச் செய்திகள்

மஹேந்திர பல்லவன் பேசுகிறார்.

என்னைப்பற்றித் தமிழகத்தில் சரித்திரங்கள் எழுதப் படுகின்றன. அவைகளில் சில செய்திகள்தான் உண்மை. பெரும்பாலும் ஆதாரமற்றவை. நான் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயம் புகுந்ததாகச் சொல்லப்படுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. என்காலத்தில் என் அரசாங்கத்தில் என்னால் தண்டிக்கப்பட்டதாகச் சொல்லப் படும் அப்பர் (திருநாவுக்கரசர்) என்னைப்பற்றி ஒரு வார்த்தையும் தமது தேவாரத்தில் பாடக்காணேன். நான் தண்டித்த செய்தியையுங் காணேம், மதம் மாறியதையுங் காணேம். ஆகவே நான் முதலில் எவ்வாறு சமணக் கொள்கையில் பற்றுடையவனாக இருந்தேனோ அப்படியே இறக்கும்போதும் சமணனாகவே இறந்தேன். இவ் வுண்மைகளை நான் இயற்றிய மத்தவிலாச பிரஹசனம் என்ற சமஸ்கிருத நாடகத்தை வாசித்து அறிந்து கொள்க. நான் சமணக்கோயில்கள், குகைகள் முதலிய பல அமைத் துள்ளேன். மற்ற சமயங்களை வெறுக்கவில்லை யாகை யால் அவர்களுக்கும் சமணப்பெரியோர்களின் வேண்டு கோளின்படி பல கோயில்கள் கட்டியுள்ளேன்.

அறிவிப்பு

தமிழ் நாட்டு ஜைந மாணவர் மஹாநாட்டின் வரவு செலவு கணக்குகள் பலகாரணங்களை முன்னிட்டு சீக்கிரத்தில் அச்சிட முடி யவில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் ஜைநப்பெருமக்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்த இதழில் வரவு செலவு கணக்குகள் வெளிவரும் தாமதத்திற்கு மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

D. அபராஜிதம்
செயலாளர்.

நற் செய்தி

காஞ்சிபுரம் ஜைனப் பெருமக்கள் கூடி திருத்தக்க தேவர் செந்தமிழ்க் கழகம் அமைத்து அதன்மூலம் பிரதி ஞாயிறு தோறும் மாலை 6-30 மணிக்கு சீவக சிந்தாமணி சொற்பொழிவு நடத்திவருகின்றார்கள். இவ்வண்ணமே எல்லா இடங்களிலும் திருத்தக்க தேவருடைய அருள் பரவ வேண்டுமென்று விரும்புகின்றோம்.

நீதி நூல்களும் தற்கால வாழ்க்கையும்

எஸ். ஏ. ஜைன், எம். ஏ.,

திருக்குறள், நாலடியார் இவ்விரண்டும் சிறந்த நீதி நூல்கள் எனத் தமிழ் மக்களனைவராலும் போற்றப்படுகின்றன. ஆனால், இவ்விரு நூல்களில் கூறியுள்ள கருத்துகளுக்கும் தற்கால மனப்பான்மைக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றனஎன்று நாம் ஆராய்வோமானல், நாம் ஏன் அக்கருத்துகளை, பழக்கத்தில் கொண்டுவரவில்லை என்பது விளங்கும். அக்கருத்துக்களில் நம்பிக்கைக் குறைந்து கொண்டு வருகின்றது என்பதில் சந்தேகமில்லை. சில காலம் கழிந்த பிறகு அவைகளின் உண்மைப் பொருள்களை அறிவதே அரிதாய் விடுமென்பது நிச்சயம்.

இந்நூல்களைத் தெளிவாகக் கற்று உணர வேண்டுமானல், அவைகளின் அடிப்படையான கொள்கைகளை ஆராய்ந்துணர வேண்டும். அக்காலத்திய மக்களின் மனப்பான்மை யாது? இந்நூல்களை இயற்றிய ஆசிரியர்களின் கருத்துக்கள் யாவை? அவைகளுக்கும் நவீன அபிப்பிராயங்களுக்கும் எவ்வளவு மாறுபாடுகள் இருக்கின்றன? இந் நூல்களில் கூறியிருக்கும் நீதிகள், தற்காலத்திற்கு ஏற்றவையா? எவ்வளவு தூரம் அவைகளை நடைமுறையில் கொண்டுவர முடியும்?

இந் நீதி நூல்கள் கூறும் விஷயங்கள் யாவை என்று சற்று கவனிப்போம். உடல், ஆவி, வினை, இம்மை, வீடு மறுமை, வீடுஎய்துதற்குஏதுவாயத் தவம், துறவு என்னும் இவை சாத்திய மாகாவிடில், இயல்போடு கூடிய இல்வாழ்க்கை, இல் வாழ்க்கையின் முக்கிய கடமையாகிய விருந்தோம்பல், சிற்றின்ப பேரின்பங்களைப் பெறும் வழி, துன்பங்கள் நம்மை அணுக வொட்டாமல் காத்துக் கொள்ளுதற்கு நாம் அநுசரிக்க வேண்டிய முறைகள் முதலியவற்றைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. சமயங்களின் நோக்கமும் நூல்களின் நோக்கமும் ஒன்றே. துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெறும் நல்வழியைப் புகட்டுவதே இவைகளின் சிறந்த நோக்கம். ஆனல் காமம், வெகுளி

மயக்கம் இவைகளில் சிக்கிய நாம் இன்பத்தை விரும்புவதோடு அதைப் பயக்கவல்ல வழியில் ஈடுபடாமல், துன்பத்தை விளைவிக்கும் செய்கைகளிலேயே பெரும்பாலும் ஈடுபட்டு வருகிறோம். இது அறியாமை என்று நாம் கருதுவதில்லை. தங்கள் செய்கைகளைப்பாரபக்ஷமின்றி உற்று நோக்கித் தங்கள் குறைகளைத் தாங்களே கண்டித்துக்கொள்பவர்கள் ஒரு சிலரே இவ்வுலகில் உளர். ஏனையோர் மனம் போனவாறே இழுத்துச் செல்லப் படுகின்றனர்.

வீட்டுலகத்தைச் சிறப்பித்துக் கூறியிருப்பதற்குத் தக்க காரணம் உண்டு. அதுவே நிலையானது; அழிவில்லாதது. அதுபற்றியே அதைப் பேரின்பமென்றும், இவ்வுலக வின்பத்தைச் சிற்றின்பமென்றும் பண்டைத் தமிழாசிரியர்கள் கூறி யிருக்கின்றனர்.

உடல்வேறு, ஆவிவேறு; ஆன்மாவின் இயற்கை இன்பமாகிய வீட்டின்பமே நிலையானது; மற்றவை யாவும் நிலையில்லாதனவே. ஆகையால், இந்நிலையான பேற்றை அடைவதே நம்முடைய முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். அதற்குத்துணைபுரிவது அறம். துன்பத்தை விளைவிப்பது தீவினை. ஆகையால், தீவினை தீயினுமஞ்சப்பட வேண்டும் என்று கூறி யிருத்தல் காண்க.

'அறத்தினூங் காக்கமு மில்லை அத
மறத்தலி னூங்கில்லை கேடு.' [னை

ஆனால், உலகப் போக்கு எப்படி இருக்கிறது? மறுமையைப்பற்றி எண்ணுவது தவறாக அன்றோ தற்காலத்தில் கருதப்படுகிறது. இப்பிறவியில் நாம் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் அல்லவோநம்முழுமனத்தையும் கவருகின்றன. மறுமையை நிராகரிப்பதனாலன்றோ நாம் நம்முடைய தற்கால இன்பவாழ்விற்காக எந்த முறையையும் கையாளுகிறோம்; பிறரை வருத்துகிறோம்; அவர்களைத் துன்புறுத்தி நாம் இனிது வாழ விழும்புகிறோம். அப்பேர்ப்பட்ட இன்பவாழ்க்கை நீடு நிலவி இருக்க முடியுமா என்பதை ஒருக்காலும் நாம் எண்ணுவதில்லை.

வினையின் செய்கையில் நமக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது. சிலருக்கு அடியோடு நம்பிக்கை கிடையாது. ஆனால், நம் நீதி நூல்கள் பழவினையைப் பற்றி என்ன கூறுகின்றன என்று பார்ப்போம்.

பல்லாவு ளுய்த்து விடினும், குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக்கோடலை ;—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே, தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

உறற்பால நீக்கல், உறுவர்க்கு மாகா,
பெறற் பாலனையவும் அன்னவாம், மாரி
வறப்பின், தருவாருமில்லை ; அதனைச்,
சிறப்பின், தணிப்பாருமில்.

சிறுகா, பெருகா ; முறைபிறழ்ந்து வாரா,
உறுகாலத்தூற்ருகா, ஆமிடத்தேயாகும்,
சிறுகாலைப்பட்ட பொறியும் ; அதனல்,
சிறுகாலத் தென்னைபரிவு ?

எவ்வளவு தெளிவுடனும், திட நம்பிக்கையுடனும் பழவினையின் செய்கை கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் அக்காலத்து வாழ்க்கையும், அவர்களின் அடிப்படையான கொள்கைகளும், அவர்கள் மனப்பான்மையும், அவர்கள் நோக்கங்களும் சரிவர அறியாமல் இந்நூல்களின் நுட்பங்களை நாம் உணர முடியாது. உணர்ந்தும் நமக்கு அவைகளில் நம்பிக்கையில்லாவிடில் அவை நமக்குப்பயன்படா எனவே அவற்றை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை இனி கவனிப்போம்.

(தொடரும்)

போற்றுகின்ருேம்

யாங்கள் இம் "மும்மணி" என்னும் பத்திரிகையை நடத்த நிச்சயித்து, ஜினகஞ்சி மடத்து ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மி சேன பட்டாரக பட்டாசார்யவர்ய ஸ்வாமியார் அவர்களிடம் அறிவித்த போழ்து, அன்னவர்கள் அருள், பொருள், ஆவி மூன்றையும் இம் மும்மணிக்கு உதவி செய்து, இதனை நீடூழி காலம் நடத்திக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிருர்கள். அன்னவர்களுடைய உதவிக்குக் கைம்மாருக இம் மும்மணியை மூதன் மூதல் அவர்களுக்கு ஸமர்ப்பித்துப் போற்றுகின்ருேம். மும்மணி ஆசிரியர்.

ஜைனமும் தமிழ்நாடும்

வித்வான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

தமிழ்நாட்டில் மிகப் பழைய காலத்தில் ஜைன பௌத்த சமயங்கள் பரவியிருந்தன என்பது தமிழ் நூல்களால் அறியலாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியத்தில் ஜைனசமயக் கோட்பா கள் சில உள்ளன என்பது அறிஞர்சிலரது கருத்து. அதற்குப் பிற்பட்டனவாகிய தொகைநூல்களுள்ளும் அவை ஒரோவழிக் காணலாகும். புறநானூற்றில் கடவுளரை யெண்ணுமிடத்துக் கண்ணபிரானோடு பலராமனை ஒருங்கு எண்ணியிருத்தலும் பரிபாடலில் பலராமனது விக்ரஹவழிபாட்டைக் கூறியிருத்தலும் காண்க. பலராமனுக்குக் கோயில் எடுத்து வழிபட்டிருப்பது ஜைனசமயக் கொள்கையே யாகும். பதினெண் கீழ்க்கணக்குநூல்களுள் நாலடியார் பழமொழி எலாதி முதலியன ஜைனசமயத்தவரால் இயற்றப்பட்டனவே. இவற்றுள் ஜைன சமயக்கொள்கைகளும் சில வந்துள்ளன. எலாதியில் 66, 67-ஆஞ் செய்யுட்கள் ஜைனசமயத்தின் சுவர்க்க நரகவியல்புகளைத் தெரிவித்தல் காண்க. நரகங்கள் ஏழனுள் ஒன்று இ ள்வட்டமாயும் (தமப்ரபை), மற்றொன்று மிக்க இருள்வட்டமாயும் (தமஸ்தம:ப்ரபை) இருக்கும். அவற்றையே 'இருளோடிருள்' என்று அந்நூல் கூறியுளது.

திருக்குறளில் 'உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண அண்ணாத்தல் செய்யா தளறு' என்னுஞ் செய்யுளில் கூறப்பட்டுள்ள நரகம் நிகோதம் என்று ஜைனமதத்தில் வழங்கப்படுவதாகும். இஃது அம்மதத்தில் கூறப்படும் ஏழுநரகங்களுக்குக் கீழ்ப்பட்டது. அவ் வேழுநரகங்களிலும் துன்பம் அனுபவிப்போருக்குக் காலவரையறை உண்டு. நிகோதத்திற்கு அவ்வாறு காலவரையறை இல்லை. ஆதலின் அதனை 'மீளாநரகம்' என்ப. அந்நரகத்தையடைந்தோர் மீளுதலின்மையையே, 'அளறு அண்ணாத்தல் செய்யாது' என்பதனால் வள்ளுவனார் தெரிவித்துள்ளாராவர். இஃது, 'ஏழாம் நரகத்தின் கீழாம் நரகத்தை யடைவான்' என்று தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியாலும் அறியலாகும்.

இப்போதுள்ள பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணி ஜைன சமயத்ததுவே என்பதும், சிலப்பதிகாரம் ஜைன சமயத்தவரது வரலாறே என்பதும் அனைவரும் அறிந்தவை. இனி சிறுகாப்பியங்களுள் ஒப்பில்லாததாகிய சூளாமணியும் ஜைனசமயத்துப் பலதேவ வாசுதேவர்களின் சரிதத்தைக் கூறுவதுவே. சிற்றிலக்கியங்களுள் திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி முதலியன ஜைனசமயத்தனவே

இலக்கணங்களுள் பல்லோராலும் பயிலப்படுகின்ற நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், வச்சணந்திமாலை முதலியன ஜைனசமயப் பெரியோர்கள் இயற்றியனவே திவாகரம், சூடாமணிநிகண்டு முதலிய நிகண்டுநூல்களும் அச் சமயத்து அறிஞர்களால் அளிக்கப்பட்டவையே இவற்றால், தமிழ்மொழியில் ஒவ்வொரு துறையிலும் ஜைனசமய ஆசிரியர்கள் டல் வேறு நூல்களை இயற்றித் தமிழணங்கைச் சிறப்பித்து, அறிவுச்சுடரை நாட்டில் பரப்பினர் என்பது நன்கு அறியலாகும்.

இவ்வாறு ஜைனசமய ஆசிரியர் இயற்றிய நூல்கள் தமிழ்நாட்டில்

யாண்டும் பரவியதனால், அச் சமயக் கொள்கைகளும் நாட்டில் பரவலாயின. பல கூறுதல் என்? நாய்ச்சியார் திருமொழியில், காமனை வேண்டுமிடத்து, 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்று கூறியிருப்பதனால், ஸ்ரீ வைஷ்ணவப் பெரியாராலும் ஜைனசமயக் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்னலாகும். இக்கருத்து, 'காமனுஞ் சாமனும்' என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளான் விளங்கும். கண்ணபிரான் குருந்தொசித்த வரலாறும் அந்நூலானே விளக்கமாகின்றது

இனி, மக்கள் முதற்கண் எழுத்துக்களைக் கற்கத் தொடங்கும் பொழுது 'ஹரி: நமோத்துசிந்தம்' என்று சொல்லும் வழக்கம் இன்னும் நம்நாட்டில் நிலைபெற்றுளது. 'ஸித்தந் நம:' என்று கன்னடத்திலும், 'ஓம் நம:சிவாய ஸித்தம் நம:' என்று தெலுங்கிலும் இவ்வாறே சித்தனை வணங்கி அக்ஷராப்யாஸம் செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் வாழுந் தமிழ்மக்கள் தூயவுணவினை 'ஆரதபோஜனம்,' 'ஆரதம்' என்று இன்றும் வழங்குகின்றனர். 'ஆரதம்' என்பது 'ஆர்ஹதம்' என்பதன் திரிபு. அஃதாவது, அர்ஹத்ஸமய சம்பந்தமானது என்பதாகும். ஆகவின், ஆரதபோஜனம் என்பது ஊனை விலக்கிய உணவிற்குப் பெயராயிற்று. இதனை இக்காலத்தவர் 'சைவவுணவு' என்று வழங்குகின்றனர். இதனைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் சிலர் 'சைவவுணவு' என்று வழங்கினும், ஆரதம் என்பது பெருவழக்காய் உளது. யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் பலர் தமிழ்நாட்டில் திருநெல்வேலி முதலிய பல ஊர்களினின்று சென்று ஆண்டுக் குடியேறியவர்களாகலின், அவர்கள் வழங்குஞ் சொல்வழக்கு, பண்டு தமிழ்நாட்டில் வழங்கிய வழக்கே ஆதற்கு ஐயமின்று.

(ஸ்ரீபுராணத்தில் வெளிவந்தது)

நன்றி செலுத்துகின்றோம்

ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மிஸேன பட்டாரக பட்டாசார்ய சுவாமிகள் உபகாரச் சம்பளநிதியிலிருந்து **1946-47**-ஆம் வருஷத்தில் ஹைஸ்கூல் மாணவர்களும் காலேஜ் மாணவர்களும் உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்து தேர்ச்சியடைந்திருக்கின்றனர். **47-48**-க்கும் உபகாரச் சம்பளத்திற்காகப் பிரார்த்தனைப் பத்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுவரை மூன்று மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் ஏனைய மாணவர்கட்கும் கிடைக்கும் என்று நம்புகின்றோம். ஸ்ரீ சுவாமிகள் அவர்கட்கு மாணவர்கள் சார்பாக நமோஸ்து பூர்வகம் நன்றி செலுத்துகின்றோம்.

செயலாளர்

தமிழ்நாட்டு ஜைந மாணவர் மஹாநாடு

சித்தன்ன வாசல்

எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல்.

நான் காலேஜில் படிக்கும்போது எனது சரித்திரப் பேராசிரியர் சித்தன்ன வாசலைப்பற்றி எங்களுக்குச் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. இக்காலத்து மாணவர்களுக்கு அதைப்பற்றி ஏதேனும் விவரம் தெரியுமா என்பதும் சந்தேகந்தான். நான் பிற்காலத்தில் தென்னிந்திய சரித்திரத்தைப் பற்றி படித்த காலத்தில் சித்தன்ன வாசலைப்பற்றி இரண்டே வரி படித்தேன். அது ஒரு குகை. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ளது. அது சுதைச் சித்திரத்திற்குப் பேர்போனது என்று மாத்திரம் சில வார்த்தைகளே தான் அதில் இருந்தன. அதற்கப்புறம் நான் பொதுவாக இந்தியக் கலாசாரத்தைப் படிக்க நேர்ந்தது. அப்போது, இச் சித்தன்ன வாசல் ஒரு சாமான்ய இடமல்ல, நிஜாம் ராஜ்யத்திலுள்ள அஜந்தா குகைகளின் ஓவியங்கள் உலகத்தில் எவ்வளவு பிரசித்தி பெற்றிருக்கின்றனவோ அவ்வளவு பிரசித்தி சித்தன்ன வாசல் சுதைச் சித்திரங்களுக்கும் உண்டு என்றறிந்தேன். அதைப்பற்றிப் பல வருஷங்களாகப் படித்து வந்தேன். சித்தன்ன வாசலுக்குப் போய் வர வேணுமென்ற அவா ஏற்பட்டது. ஆயின் அந்த அவா 1940-ம் வருஷம் மே மாதம்தான் நிறைவேறியது.

இது புதுக்கோட்டையிலிருந்து வடமேற்கே 9 மைல் தூரத்தில் அன்னவாசல் என்ற ஊருக்குப் போகும் பாதையை விட்டு வடக்கே ஒரு மைல் தூரத்தில் சித்தன்ன வாசலுக்கு ஒரு ரஸ்தா பிரிகிறது. அந்த ரஸ்தாவை, சித்தன்ன வாசல் குகைக்குப் போவதற்காகவே ஒரு மைல் தூரம் அரசாங்கத்தார் போட்டிருக்கிறார்கள். சித்தன்ன வாசலில் ஜனங்கள் வசிப்பதில்லை. அங்கே உள்ளது மலையும் குகையுந்தான். மலை சுமார் 200 அடி உயரமுள்ளது. தென்வடவாகப் படுத்துக் கிடக்கிறது. அதன் வட காடியில் மேற்குச் சரிவில் மலையில் குடைந்த குகை ஒன்றிருக்கிறது. இங்கேதான் உலகப்பிரசித்திபெற்ற ஓவியங்களும் சிற்பங்களும் இருக்கின்றன.

சித்தன்ன வாசலையடைந்து குகைக்கு முன் நின்று சற்று நேரம் நாலா பக்கமும் . உண்மையில் மூன்று பக்கந்தான்: ஏனென்றால் பின்னால் மலை மறைக்கிறது . பார்த்தால் அந்த இடம் செழிப்புள்ளது, வனப்பு மிகுந்தது என்பது தெரியும் சித்தன்ன வாசலைச் சுற்றிச் சுமார் இருபது குளங்களிருக்கின்றன. எல்லாம் சாகுபடிக்கு உதவுகின்றன மலைச்சரிவுகளிலும், மலையடிவாரத்திலுள்ள புதர்களிலும் கும்பல் கும்பலாகப் பெண்கள் இடுப்பில் கூடையை வைத்துக்கொண்டு சிலரும், சிலர் கையில் ஒரு சிறிய அரிவாளுடனும் சில செடிகளை வெட்டிக்கொண்டிருந்த காட்சி தென்பட்டது. அந்தச் செடிகளை எதற்கு வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு வயலுக்கு உரத்திற்காக என்று அவர்கள் சொன்னார்கள், சித்தன்ன வாசல் என்ற பெயர் வரக் காரணமென்ன? இதற்குப் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள்; இது சம்ஸ்கிருத வார்த்தையான "சித்தானாம் வசஹ" அதாவது சித்தர்கள் வசிக்கும் இடம் என்ற அர்த்தமுள்ள வார்த்தையிலிருந்து வந்ததாம் அதை பாமர மக்கள் அந்தக் காலத்தில் 'சித்தன்ன வாசல்'

என்று ப்ராகிருத பாஷையில் சொல்லி வந்தார்களாம். இது ஒரு ஜைன மதத்தைச் சேர்ந்த குகை. ஜைனர்களுள் பஞ்ச நமஸ்காரம் என்ற ஒரு மத ஸம்ஸ்காரம் உண்டு. அதாவது பிரதி தினமும் ஒரு ஜைனன் ஐந்து பேர்களுக்கு வந்தனம் செய்ய வேண்டியது. அவர்களில் சித்தர்கள் ஒருவராவர். ஆகவே இதனின்றும் ஜைனர்களுக்குள் சித்தர்களுக்கு அதிக மதிப்புண்டு என்பது தெரிகிறது.

கற்களால் கட்டப்பட்ட மதில் சூழ்ந்திருக்கும் இடந்தான் குகை. இக்குகை சிறிது காலத்திற்கு முன்பு கவனிப்பாரற்றுக் கிடந்தது. இதை முதலில் கண்டுபிடித்து உலகத்துக்கு அதன் பெருமையைத் தெரியப்படுத்தியவர் காலஞ்சென்ற டி. ஆர். கோபிநாத ராவ் அவர்கள் ஆவார்கள். அவர் இளமையிலேயே இறக்க நேரிட்டதால் மேற்கொண்டு அவர் இதைப்பற்றி எழுத முடியவில்லை ஆயின் புதுச்சேரியைச் சேர்ந்த பிரான்சு தேசத்துச் சரித்திராசிரியரான ஜோவீ டுப்ரேல் என்பவர் பல்லவர்களைப் பற்றி எழுதி யிருக்கிறார். சிலாசாசன டைரக்டரா யிருந்த லாங்ஹர்ஸ்ட் என்பவரும் "பல்லவர்களின் சிற்பம்" என்பதைப் பற்றி எழுதி யிருக்கிறார். அதற்குப் பிறகு சென்னை மியூசியத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. என். ராமச்சந்திரன் அவர்கள் "மஹேந்திரவர்மன் முதலாவது ஓவிய அரசன்" என்ற ஒரு சிறந்த சிறிய நூலை எழுதி யிருக்கிறார். அவ்விதமே மியூசியத்தில் உள்ள, சிற்ப ரசாயன சாஸ்திரி வேலைபார்க்கும் டாக்டர் ஸி. பரமசிவம் அவர்களும் இதைப்பற்றி தனித்தனியாக ஓவியம், சிற்பம் ழுவற்றை யெல்லாம் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். சித்தன்ன வாசல் ஓவியத்தின் சிறப்பைப் பற்றி என். ஸி. மேதா, ஐ. ஸி. எஸ்., என்பவர் தனது இந்திய ஓவியத்தை பற்றிய ஆராய்ச்சிகள் (Studies in Indian Painting) என்ற புத்தகத்திலும் ஸ்ரீ எம். எஸ் சுந்தர சர்மா அவர்கள் திருவேணி பத்திரிகையிலும். ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீனிவாசன் சில கட்டுரைகளையும் எழுதி யிருக்கிறார்கள். ஸ்ரீ சுந்தர சர்மா அங்குள்ள படங்களைப் பார்த்து எழுதி யிருக்கிறார். ஸ்ரீ வ. கணேச சர்மா அவற்றைப் போட்டோ எடுத்திருக்கிறார். சமீபத்தில் இரான் தேசத்தைச் சார்ந்த சர்கீஸ் ககோடோரின் என்ற ஓவியக்காரரும் சித்தன்ன வாசல் ஓவியங்களைப் பார்த்து எழுதி யிருக்கிறார். இவற்றை யெல்லாம் சித்தன்ன வாசல் ஓவியத்தில் அக்கறையுள்ளவர்கள் படிக்கலாம். ஆயின் இவை யெல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன.

பல்லவ அரசர்களுள் மஹேந்திரவர்மன் மிகவும் பிரசித்தி பெற்றவன். கி. பி. 600 முதல் 625 வரை மஹேந்திரவர்மன் அரசாண்டதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டிலே முதன் முதல் மலைகளைக்குடைந்து குகைகளைச் செய்து சிற்பங்களை வெட்டிச் சித்திரங்களைத் தீட்டச் செய்த பெருமை மஹேந்திரவர்மனுக்குத்தான். மஹேந்திரவர்மன் ராஜ்யத்தில் ஜைனர்களும் இருந்தனர். ஜைன சந்நியாசிகள் தபஸ் செய்வதற்கென்றே இம்மாதிரிக் குகைகளை மஹேந்திரவர்மன் வெட்டி வைத்தான் என்று சொல்லுகிறார்கள்.

மஹேந்திரவர்மன் ஒரு கலாரஸிகன். அவனைப்பற்றிக் கிடைத்துள்ள பாமண்டூர் கல்வெட்டில், அவன் 'கந்தர்வ சாஸ்திரத்'தில் அதாவது இசைக்கலையில் தேர்ச்சி பெற்றவன் என்று தெரிகிறது.

தொடரும்

ஓர் இரவு

வித்வான் வே. லக்ஷ்மணன்

1

ஓர் இரவு. வானம் மங்கிக் கிடந்தது. மழை மின்னலோடும், இடியுடனும் கலந்து, திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்தது. நகரமக்கள் எல்லோரும் வீட்டைவிட்டு நகராமல் அமைதியில் மூழ்கியிருந்தார்கள்.

அந்தப்புரத்தில் பிரமிளாதேவி மாத்திரமே காணப்பட்டாள். ரத்தினத்தால் இழைக்கப்பட்ட ஆசனத்தில், பூம்பாவைபோல் உட்கார்ந்துகொண்டிருந்த அவளுடைய முகத்தில் ஆயிரம் யோசனைகளின் சாயை பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

எழுந்தாள் ஆசனத்திலிருந்து, திரும்பவும் உட்கார்ந்தாள். நிலையில்லாத ஒரு நிலையிலே அவள் மனம் தவித்துத்தத்தளித்தது. சாளரத்தின் அருகிலே சென்று நின்றாள்.

இயற்கையின் கொந்தளிப்பை அவளால் பொறுத்துக் கொண்டிருகக முடியவில்லை. அவளுடைய வெகுநாளைய ஆசையும், அந்த ஆசைக்கு ஏற்பட்ட நாசமுமே அவள் மனத்தை அரித்துக்கொண்டிருந்தன.

எண்ணங்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டன.

“ஆஹா! என்ன அழகு! என்ன அறிவு! அவன் இப்பொழுது இருந்தால் இடியும் மின்னலும் என்னை என்ன செய்ய முடியும்! வாழ்க்கையிலே சுகம்தானே லக்ஷ்யம்! அதன் மார்க்கத்திலே துணிந்து இறங்குவதும் நியாயம்தானே!

ஆனல், அரசன் குறுக்கிடுகிறானே! இந்த அந்தப்புரத்திலே —அந்தப்புரமா இது? சிறையிலே அவன் அல்லவா அடைத்து வைத்திருக்கிறான்? மாதம் இரண்டாக இதே சோகம் என்னை வதைக்காமல் வதைக்கிறதே!

என் வாழ்க்கைக் காதலன்—என் தந்தையைக் கொன்ற இவ்வரசன்தானா? என் தந்தைக்கு யமனானவனை நான் விரும்புவதா? மேலும்,

நரைத்துத் திரைத்துக் கிடக்கும் இவனா எனக்குத்தலைவன்? இவனா என் ஆசைநாயகன்?

என்தலைவன் என் மனத்தில் குடிகொண்ட அமைச்சன் அதிரூபன் அல்லவா? அவன் அழகைப் பருகிக்கொண்டேயிருந்தால் காலம் போவதுகூடத் தெரியாதே! இவ்வரசன் அவன் கால் தூசிக்குச் சமம் ஆவானோ?”

இவ்வாறு, பிரமிளா எண்ணியவண்ணம் நின்றாள். அவள் கண்களினின்றும் பெருகிய நீர்—அன்று பெய்து கொண்டிருந்த மழை நீருடன் கலந்து, பெரிய ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. கதிரவனின் உதயத்தைக் காண விரும்பிக் காத்திருக்கும கமல மலர்போல, வாடி வருந்தி முகம் சுருங்கி நின்றாள்.

ஆனால், இயற்கை அன்னை அவளுடைய வாழ்க்கையிலே இன்பம் ஊட்ட வழிசெய்துகொண்டிருக்கிறாள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அந்த ஓர் இரவு அவள் வாழ்க்கையிலேயே ஒரு புதிய, புனித பதவியை அல்லவா தரப்போகிறது!

2

பிரமிளாவின் தந்தை அமரசிம்மன் அவந்தி நகரத்தை ஆண்டு கொண்டிருந்தான். அவன் தன் அருமை மனைவியை இழந்தும் கூட, பிரமிளாவின்மேல் வைத்திருந்த பாசத்தால் கலக்கம் இன்றி வாழ்ந்து வந்தான். மேலும், குடிகளுடைய நெஞ்சிலே அவன் இறைவனாகவே காட்சி அளித்தான். அவனை வெறுக்கும் வாயே அந்நாட்டில் கிடையாது.

நல்லவனைக் கண்டால் பொல்லாதவனுக்கு ஆகாது என்பது தான் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமாயிற்றே!

எதிரி வீரபாகு தன் சேனைகளுடன் அவந்தியைச் சூழ்ந்து, முற்றுகையிட்டான். சேனையாகிய கடலின் நடுவே ஒரு சிறு தீவு போல் விளங்கிற்று அவந்திநகரம்.

திடீரென்று எதிர்பாராமல் நேர்ந்த இந்த விபத்தைத் துளிக் கூடப் பொருட்படுத்தவில்லை அமரசிம்மன். மனோதைரியத்துடன் போர்புரிந்தான். முடிவில் வீர சுவர்க்கம் அவனை அழைத்துக் கொண்டுவிட்டது.

யுத்த வெறி தீர்ந்த வீரபாகு, அமரசிம்மனுடைய அரண்மனையில் நுழைந்தான், தன் புதுமனையில் நுழைவதுபோல. அங்கே அழகே உருவான—லக்ஷ்மிதேவிபோல் பிரகாசித்துக்கொண்டிருந்த பிரமிளாவை அபகரித்துக்கொண்டான். தன் பிரதிநிதியை அங்கு நியமித்துவிட்டுத் தன் நாடான மாயாபுரியை அடைந்தான். மாதங்கள் இரண்டாக அவளை அவன் படுத்தும் கஷ்டங்கள் கணக்கில்லாதவை, எப்படியோ சமாளித்துவந்தாள் பிரமிளா. ஆனால் எவ்வளவு நாட்கள்தாம் சகித்துக் கொண்டிருப்பது!

அதிரூபன் அந்நாட்டின் மந்திரி. பால்போன்ற முகத்திலே இனிமையும் கொண்டவன். அவனைப்பற்றிப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறாள். பாங்கியர்களும் அவள் வருந்தும்போது கூடத் தாமும் வருந்துவார்கள். அப்போது, 'அதிரூபன்தான் தங்களுக்குத் தகுந்தவர்' என்று அவர்கள் கூறுவதுண்டு. இவைகளையெல்லாம் கேட்டு அதிரூபனைக் காணவேண்டும் என்ற ஆவலும் கொண்டாள்.

ஒரு நாள் தோட்டத்திலே அதிரூபனைப் பார்த்தும் விட்டாள். ஆனால் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அன்று முதல் அவள் தன் உள்ளத்தை அதிரூபனிடம் அர்ப்பணம் செய்துவிட்டாள்.

ஆனால், எப்படி அவனை அடைவது?

அரசன்—பாழும் ஆசையைக் கைக்கொண்டு தன் சுயநலத்திற்காக அவள் சுகத்தைப் பலி வாங்கக் காத்துக்கொண்டிருக்கும் அரசன்—இதை ஏற்றுக்கொள்வானா? காதில் விழுந்தால், உடனே கண்ணிலிருந்து தீப்பொறி பறக்கக் கடுந்தண்டனை விதிக்க அவன் அஞ்சுபவனா?

பிரமிளா ஒன்றும் கூறமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த போதெல்லாம், சீதைக்கு அமைந்த 'திரிசடையைப்போல' நளினி என்னும் பாங்கி தேறுதல் கூறிவந்தாள். ஆனால் யார் சமாதானம் கூறினால்தான் என்ன? நல்லப்பாம்பின் புற்றில் அல்லவா நுழைந்து விட்டாள்! (அவளா நுழைந்து விட்டாள்! விதியல்லவா நுழைந்து விட்டது.)

அரசனுடைய இக் கொடிய செய்கை குடிமக்களுக்கும் தெரியும்—அதிரூபனுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் எல்லோரும், துரியோதனனுடன் கூடிய பீஷ்ம துரோணர்களின் நிலையில் இருந்தனர். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை இருப்பினும், இதற்கு முடிவு இல்லாமலா போய்விடும்?

இன்னொரு விஷயம்: மாசு மறுவில்லாதவளாய் இது வரையிலும் அரசனாலும் தீண்டப்படாமல் தன்னைக் காத்துக் கொண்டிருந்தாள் பிரமிளா. எவ்வளவோ காரணங்களைக் கூறி அவனைத் தடுத்தும் பார்த்தாள். கடைசியில் அவனுக்குச் சம்மதம் கொடுப்பவள்போல் ஒருநாளைக் குறிப்பிட்டாள். அந்தநாள்தான் பொழுது விடியப்போகும் மறுநாள். தன் உயிரை அன்றிரவே மாய்த்துக் கொள்வதைத் தவிர்த்து வேறு ஒரு வழியும் தோன்றவில்லை.

இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் மழையின் கொந்தளிப்பு மூண்டது. அவளும் புலம்பினாள்.

3

அதே சமயம் அங்கு 'அரசே!' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

"யார்?" என்றாள் பிரமிளா.

"நான் தான் அதிரூபன். அரசர் இருக்கிறாரா?" என்றான் வெளியிலிருந்துகொண்டே அதிரூபன்.

பிரமிளா ஆச்சரியம் அடைந்தாள். கதவைத் திறந்து 'வாருங்கள் உள்ளே' என்றாள்.

"ராணி! இது அந்தப்புரம் இல்லையா? நான் உள்ளே வருவதற்கில்லை" என்றான்.

"பரவாயில்லை" என்று முணுமுணுத்தாள் பிரமிளா.

"பொழுது விடிவதற்குள் என்ன ஆகுமோ? ஆறு உடைப்பு எடுத்துக் கொண்டு விட்டது. வீதியில் முழங்கால் மட்டம் நீர் ஓடுகிறது. இதை அரசரிடம் அறிவிக்கவே வந்தேன்" என்றான்.

"அரசர் இங்கு இல்லையே!" என்று அவள் கூறினதும் தன் நடையைத் திருப்பினன், வெளியே!

பிரமிளாவின் குரல் அவனைத் திரும்பச் செய்தது. 'போகலாம் வாருங்கள்' என்று அழைத்தாள்.

தன் கருத்தை அவனிடம் தெரிவிக்கவேண்டும் என்று துடித்தது மனம். ஆனல், நாணமும் அச்சமும் தடை செய்தன.

"சரி, போய் வாருங்கள்" என்ருள் வேருென்றும் சொல்ல முடியாமல்.

அதிரூபனும் செல்லத்தொடங்கினன். அதற்குள், அவள் தன்னை யறியாமலேயே உணர்ச்சிக்கு அடிமையானவளாய், 'ஒரு விஷயம்' என்று திரும்பவும் கூப்பிட்டாள்.

"பிரமிளாதேவி! அரசரிடம் உடனே செல்லவேண்டும். சீக்கிரம் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்ருன்; ஒன்றும் அறியாத அதிரூபன்!

"என்ன அவசரம்? இராவிக்கு இராவே என்னசெய்து விடப் போகிறீர்கள்? அரசரும் வரும் சமயம்தான். எல்லாம் இங்கேயே பேசிக்கொள்ளலாம். உள்ளே வாருங்கள். நீங்கள் துவாரபாலகரா என்ன? இங்கேயே நிற்கவேண்டுமா? என்று சேர்ந்தாற்போல் நாலைந்து வாக்கியங்களைக் கூறிவிட்டாள்; ஆசையினல் ஏற்பட்ட தைரியத்தால் "தேவி, அரசனை நகர வெளியிலேயே நான் சந்தித்துக்கொள்கிறேன். அந்தப்புரத்தில் வந்திருப்பது பெரிய தவறு ஆகும் நான் வருகிறேன்." (தொடரும்)

வாழ்த்துகின்ருேம்

யாம் நடத்திவரும் வர்ணீஜீ கிரந்தமாலை, மஹாவீர் கம்பனி முதலிய ஸ்தாபனங்கள் அமைத்தற்கு ஏதுவாய் இருந்தவர்கள், மேல்சித்தாமூர் வே. ஜீ. சம்பத்து நைனர் அவர்கள் குடும்பத்தவர்கள். ஜைன ஸித்தாந்தம் முதற் புஸ்தகம், தத்வார்த்த ஸூத்ரம் இவைகளை அச்சிட ஊக்கமளித்து, பொருளுதவியும் செய்தவர்கள் அவர்களே யாவர். யாம் இத் துறையில் ஊக்கம் செலுத்தியதற்கும் அவர்களே காரணம் ஆவர். அவர்களுடைய ஊக்கமும் பொருளுதவியும் இன்றேல், இன்று இந்த ஸ்தாபனங்கள் அமைந்து இரா வென்றே கூறலாம். ஆகலின் காலஞ்சென்ற தனமதி அம்மாள் ஸ்வர்க்கத்தில் சுகத்தை யடைதற்கும், வே. ஜீ. சம்பத்ராவ்நைனர் குடும்பத்தார்கள் நெடுங்காலம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து, இன்னும் இப்பெற்றிய தர்மகார்யங்களில் அருள் பொருள் ஆவிகளினும் உதவிசெய்து உலகிற்கு உதவுவார்களென்று அவர்களையும், இவற்றிற்கென நன் கொடை அளித்த, ஜெங்கம்பூண்டி ஸ்ரீதர நைனர், சேட் ரிகப்தாஸ் ஜைன், எரும்பூர் சந்திரகீர்த்தி சாஸ்திரியார் பத்னி மாணிக்கம்மாள் அவர்களையும் வாழ்த்துகின்ருேம்.

தலைவர் "வர்ணீஜீ கிரந்தமாலை"

பெண் கல்வி

யஸஸ்வதி

சகடம் செல்வதற்கு இரண்டு சக்ரங்கள் இருத்தல் போல, இல்லறத்தை நடத்துதற்கு ஆண் பெண் இருவரும் ஒருதன்மையை யுடையர் ஆதல் வேண்டும். இரண்டு சக்ரங்களின்றி ஒன்று மாத்திரம் இருப்பின் சகடம் செல்லாது. அதுபோல ஆண் ஒருவனே இருந்தாலும் இல்லறத்தைச் செம்மையாக நடத்த முடியாது. பெண் ஒருத்தி ஆனாலும் அழகுபெற நடத்த இயலாது. இருவர் இருப்பினும் ஆண் ஒருவிதம், பெண் ஒருவிதமாக இருந்தாலும் இல்லறம் நடவாது. ஆகலின் ஆணும் பெண்ணும் சமானமான அறிவை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும். இல்லறத்தை செவ்வனே நடத்துதற்கு பெண்களும் அவஸ்யம் கல்வி கற்றல் வேண்டும். கல்வி கற்காமல் அறிவிலிகளாய் இருந்தால் ஆண்கள் மனத்தின்படி நடத்தற்கு ஏதுவாய் இல்லாமல் இல்லறம் இழிவடையும். ஆகலின் ஆண் பெண் இருபாலர்க்கும் கல்வி கற்றல் இன்றியமையாதது. பெண்கள்மனம் எப்போதும் இளகியமனம். அன்பும், அருளும் இயற்கையாகவே பெண்களிடை பொருந்தியிருக்கும். "பசுமரத்தாணி"போல் அவர்களுக்குப் போதிக்கும் விஷயங்கள் அனைத்தும் அவர்கள் மனத்திடையே அமைதற்குரிய மென்மை குணம் உளது. அதனல்தான் பெண்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு சுலபமாகும். கல்வியும் கஷ்டமின்றி வருகிறது. ஒருதரம் பாடின பாட்டைக் கேட்டு அதன்படியே பாடுவர், கைதொழிற்களையும் கண்டபடியே செய்வர். சித்ரம், கோலம் முதலியவற்றையும் ஒருமுறை பார்த்தவுடன் அப்படியே எழுதுவர். இப் பெற்றிய மென்மை குணம் பெண்களிடம் உள்ளதால், ஆதிகாலத்திலும் முதன்முதல் ஆதிபகவான் பிராம்மி, சுந்தரி யென்னும் பெண்களுக்கு கல்வி கற்பித்து வைத்தார். அதன் பின்னரும் கௌந்தியடிகள் ஔவை முதலிய பெண் மக்களும் கல்வி கற்று பாண்டித்யம் பெற்று அவையில் சென்று அறவுரையும் ஆற்றினர். சீதை முதலான பெண்கள் தமது பதிவிரதா தர்மத்தால் உலகில் புகழை நிலை நிறுத்தியுள்ளனர். மதனசுந்தரியும் பூசனையில் பக்தியுள்ளவளாய் குன்றும் குஷ்டரோகமுள்ள குணசீலராகிய ஸ்ரீபாலசக்ரவர்த்தியினுடைய வியாதியைப் போக்குவித்தாள். இவர்களுடைய சரிதங்களை நோக்குங்கால் ஆதிகாலத்தில் பெண்கள்

சீரும் சிறப்பும் பெற்றுவாழ்ந்தனர். எல்லோரும் கல்வி கற்று அறிவுள்ளவர்களாய் இருந்தனர் என்று விளங்குகிறதன்றோ? இப்படியிருந்தும் தற்போதைய ஆண்மக்கள் பெண்மக்களை தமது அடிமை ஆட்களாகவும், போகத்திற்குரிய பொருட்களாகவும் கருதி, பெண்களுக்கு கல்வி ஏன் என்ற கேள்வியை தமக்குள் எண்ணிக்கொண்டு, கல்வி கற்பதனல் பெண்கள் சீர் கேடடைவர் என்றெல்லாம் தோஷாரோபணை செய்தல் முற்றும் பொருந்தாததாகும்.

பெண்கள் அறிவுள்ளவர்களாய் இருந்தால்தான் தங்கள் குழந்தைகளையும் கணவனையும் நோய்முதலியன வந்த காலத்தில் மருந்துமுதலியவைக் கொடுத்து ஆறுதல் அளிப்பர். குழந்தைகள் இளமைப் பருவத்தில் தாய்களிடையே வசித்தலால் அவர்களிடம் இருக்கும் குணங்களே குழந்தைகளுக்கும் பொருந்தும். இதனை அனுசரித்தும் பெண்கள் அறிவுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். இளமை நீங்கி வாலிபம் அடைந்தவுடன் மனைவியுடன் சேர்ந்து வாழ்தலால், கணவன் தீய நடத்தை யுடையவனுயினும் புத்தியுடைய பெண்களாயின், சேலினிதேவி ஸ்ரேணிகமகாராசனை நல் வழிக்குத் தந்ததுபோல், நன்மையைச் செய்து வைப்பர். கல்வியறிவு இன்றி அறிவிலிகளாகவிருந்தால், தான் எவ்வாறு இருத்தல் வேண்டும். குழந்தைகளையும், கணவனையும், உறவினர்களையும் எவ்விதம் போஷிக்க வேண்டும் என்றும் தெரியாமல் இல்வாழ்க்கையை தீய வாழ்க்கையாக்குவர். எக்காரணத்தை முன்னிட்டும் பெண்கள் கல்விகற்றல் இன்றியமையாதது.

கல்வி யறிவைப் பெருதவர்கள் பிறவிக் குருடருக்குச் சமானமாவர்கள், கற்ரோரையே கண்ணுடையர் என்பர்.

> "கற்ரோரென்பவர் கண்ணுடையார் அல்லாதார்
> முகத்திரண்டு புண்ணுடையர்"

கல்வி அறிவற்ற மக்களை மாக்களென்றும். மரங்களென்றும் கூறுவர்.

> "கவையாகி கொம்பாகி காட்டகத்தே
> நிற்கும் அவை யல்ல நல்ல மரங்கள்
> சபைநடுவே நீட்டோலை வாசியாநின்ருன்
> குறிப்பறிய மாட்டாதவன் மரம்"

கல்வி கற்காதவர்களுடைய வாழ்நாட்களெல்லாம் வீணாகும். ஆதலின் காலத்தைக் கழிக்காமல் கல்வி கற்க வேண்டும்.

"கைப் பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்கும்நெஞ்சின் மெலிவுக்கோர் துணையுமாகும்
பெய்ப் பொருள் பிறகள் பொன்னான் புகழும் துணைவியாக்கும்
இப்பொருளெய்தி நின்றீரிவது தென்னை யென்றான்" (சிந்தாமணி)

மஹாநாடு

1947-ம் வருஷம் மே மாதம் 10-ந் தேதி திண்டிவனத்தில் தமிழ் நாட்டு ஜைன மாணவர் முதல் மகாநாடு, S. A. ஜைன் M A. அவர்கள் தலைமையின்கீழ் மிகச்சிறப்புடனும், வெற்றிகரமாகவும், நடந்தேறியது தென்னாட்டு ஜைன மாணவர்களின் முன்னேற்றத்திற் கெனவே திண்டிவனம், வந்தவாசி, ஆரணி, காஞ்சீபுரம், சென்னை ஆகிய இவ்விடங்களில் மாணவர் விடுதிகளை (Boarding and Lodging) ஏற்படுத்தவேண்டு மென்றும் அவ் விடுதிகளில் ஏழைமாணவர்களைச் சேர்த்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது. சென்னையில் காலேஜ் மாணவர்கள் வசிப்பதற்காக வசதி ஏற்படுத்த நிதி திரட்டினார்கள். அவ்வமயம் சுமார் ரூ. 4,000 வரை. கையொப்பமாயிருக்கின்றன.

"தென்னாட்டு ஜைனமகாசங்கம்" என்ற சங்க மொன்றை நிறுவி, அதன்மூலம் நூல் பதிப்பகம், மாணவர் விடுதி முதலியவற்றை சீர்பெற நடத்தவேண்டுமென்று தீர்மானித்து, அதற்குரிய காரியங்களை நடத்துவதற்காக பன்னிருவர் கூடிய நிர்வாகசபையும் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் ஜைனசமூஹத்திற்கென்று ஒரு பத்திரிகைகூட இல்லாதிருப்பது மிகவும் வருந்தத் தக்கதேயாம். தற்சமயம் மஹாவீர் கம்பெனியிலிருந்து வெளியிட நிச்சயித்திருக்கும் பத்திரிகையும், நன்முறையில் வெளிவருவதற்குரிய உதவிகளையும் நம் சமூஹத்தினர் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது

இது போன்று இன்னும் பல நன்மைதரக்கூடிய தீர்மானங்கள் அம்மஹாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவை யனைத்தும் விரைவில் வெளியிடுவோம்.

D. அபராஜிதம்
காரியதரிசி, மாணவர் மஹாநாடு.

அறிவிப்பு

பொதுஸ்தாபனங்களையும், பொதுகார்யங்களையும் நடத்துவது சுலபமான கார்யமன்று. உள்ளன்போடு நடத்துபவர்கள்மீதும் எதாவதொரு குற்றம் சாட்டுவ தென்பது உலக இயற்கை. பொதுஸ்தாபனங்களையும் பொதுகார்யங்களையும் சரிவரநன்முறையில் நடத்திவைப் பது சமூஹத்தினது கடமையாகும். பொதுகார்யத்தைத் தமது கார்ய மென்றே சமூகத்தினர் கருதவேண்டும். பொதுகார்யம் பின் நோக்கும்போதும் சமூஹத்தார் உதவி செய்துஅதனை பின் நோக்கவிடாது முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும். நடத்துபவர்கட்கும் ஊக்கத்தை அளிக்கவேண்டும்.

அஃதன்றி ஆரம்பித்த் கார்யம் முடிவு பெறுமா! எவ் வளவு காலம் வரை நடக்கும் என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு சந்தேஹப்படுவதனால் பொது கார்யம் நடை பெறாது. நம் சமூஹத்திடையே தோன்றிய ஒன்றிரண்டு பத்திரிகைகளும் நம் சமூஹத்தார்களின் ஆதரவன்றியே அவை தமது இடத்திலே இருந்துவிட்டன. அவற்றை வெளிவரும்படி முயற்சி செய்வது நம்சமூஹத்தார்களின் கடைமை யாயிருந்தும் இதுவரை அதைப்பற்றி யோசிக்கா மல் இருந்ததும் சமூஹத்தாரின் முயற்சி யின்மையாகும். சமூஹம் முயற்சி பெறுவிடில் எக்கார்யமும் நடைபெறாது. ஆகலின் சமூஹத்தின் முயற்சியே முன்னேற்றத்திற்குக் காரணமாகும். ஆரம்பித்தக் கார்யமும் இடையூறின்றி நடக்கும்.

அஃதன்றி நடத்தினவர்களின் மீதும் நடத்துவோர் களின்மீதும் குற்றம் சாட்டுவது தகுதியன்று.

தற்போது தமிழ் உலகில் உலவி வரும் மும்மணி உலகிற்கு மணியாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை. நீடுழி காலம் உலகில் உலவி மக்களுக்கு நன்மையை அளிக்கு மென்றே உறுதி கூறுகின்றோம்.

நம் சமூஹத்தினுள் மும்மணியாக விளங்கும் மூன்று பொது ஸ்தாபனங்களிலிருந்து மும்மணியை வெளியிட ஏற் பாடு செய்திருக்கிறோமாகையால், நம் உலகில் நீடுழி காலம் மக்களுக்கு உதவி செய்யும் என்று நம்புகின்றோம்.

மும்மணி ஆசிரியர்

போஷகர்நிதிக்கு வாக்களித்தவர்கள்:

மணியம் அய்யண்ண நைனர், மோழியனூர்.
,, தேவராஜ நைனர், தச்சாம்பாடி.
,, சாம்ராஜ்ய நைனர், வளத்தி.
கனகசாந்தி நைனர், வளத்தி.
S. மங்கப்பன் போளூர்.
M. ஜினநாதன் கூனப்பாடி.
M. N. யசோதரன் மோட்டூர்.
செல்வரசு நைனர், அத்திப்பாக்கம்.
A. பூபாலன் டீச்சர் வந்தவாசி
S. ஜெயராவு நைனர் தென் சேந்தமங்கலம்
S. ஆதிநாதநைனர் தச்சாம்பாடி.
அமியப்ப நைனர் திரைப்பாடி
அய்யண்ண நைனர் தென்னாத்தூர்
ம. பத்மராஜன் அகரகொரக்கோட்டை
C. கெம்பீரநைனர் ஆசிரியர் விருதூர்
V. N. பொன்னுசாமி நைனர் வந்தவாசி
அர்க்ககீர்த்தி நைனர் வெண்பாக்கம்
K. அனந்தநை நைனர் கொரக்கோட்டை
A. நேமிநாதநைனர் எருப்பூர்
T. A. துரைசாமி நைனர் காஞ்சிபுரம்

ஊக்கமும், ஆக்கமும், ஆர்வமும் உள்ள மேற்கண்ட நண்பர்கள், யாங்கள் மும்மணியை வெளியிட்டு உலகிற்கு உதவுவோம் என்று தெரிவித்த வுடன், அவர்களே மனமுவந்து ஸம்ரக்ஷகர்களாகவும் போஷகர்களாகவும் சேர்ந்து எங்கட்கு ஊக்கமளித்த நன்றியை என்றும் மறவோம். இவ்வண்ணமே இவர்கள் மேன் மேலும் நற்கார்யங்கட்கு உதவி செய்ய அருளும் பொருளு முள்ளவர்களாக இருத்தல் வேண்டி, பகவன் இன்னருள் புரிவாக.

—○—

விண்ணப்பம்

மும்மணியைத் தங்களுக்கு அனுப்பியுள்ளோம். அன்புடன் பெற்றுக்கொண்டு சந்தா தொகையை அனுப்பாதவர்கள் உடனே மணியார்டர் மூலம் அனுப்பவும்.

இதனைத் தங்கள் நண்பர்களுக்குக் காண்பித்து சந்தாதாரர்களாகவும் போஷகர்களாகவும் சேர்த்து அனுப்பவும்.

மும்மணிக்கு விஷயம் எழுதி அனுப்புவோர்கள் ஆங்கிலமாதம் 5 ந்தேதிக்குள் அனுப்பவும்.

மும்மணி ஒவ்வொரு ஆங்கிலமாதத்திலும், 15-ந்தேதி யன்று வெளி வரும்.

தனிப் பிரதி 0 3 0 வருடச்சந்தா 2-0-0
போஷகர் நிதி 10-0-0 ஸம்ரக்ஷகர் ஜீவியதனம் 50-0-0

அறநெறிச் சாரம் உரையுடன் அடுத்த இதழி லிருந்து முறையே எட்டெட்டுப் பக்கங்களாக வெளிவரும். அவற்றைத் தொகுத்து வைத்திருப்பின் கடைசியில் புஸ்தகமாக சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

மும்மணி காரியாலயம்
4. பந்தர் தெரு மதராஸ் 1

Editeb, Published and Printed by Sreepala varni
Mahavir Press, Madras